(6 pages) Reg. No. : ..........................................

**Code No. : 30866** **Sub. Code : ESTA 21**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2024.

Second Semester

Tamil

Skill Enhancement Course — படைப்பிலக்கியம்

(For those who joined in July 2023 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்து எழுதவும்.

1. படைப்பு என்பது எத்தகையச் செயல் என்று சிக்மண்ட் பிராய்ட் கூறுகிறார்?
   (அ) எதிர்மறையான செயல்
   (ஆ) மறைமுகமான செயல்
   (இ) நேர்மறையானச் செயல்
   (ஈ) இயல்பான செயல்



2. படிப்பதற்கான நாடகத்தை செய்யுள் வடிவில் வெளியிட்டவர் யார்?
   (அ) பேராசிரியர் சுந்தரம்பிள்ளை
   (ஆ) தெ.பொ.மீ.
   (இ) மு.வ.
   (ஈ) திரு.வி.க.

3. வஞ்சிப்பா பெற்றும் வரும் ஓசை எது?
   (அ) அகவலோசை (ஆ) செப்பலோசை
   (இ) துள்ளலோசை (ஈ) தூங்கலோசை

4. வெண்பாவின் ஈற்றடி எவ்வடியில் அமையும்?
   (அ) குறளடி (ஆ) சிந்தடி
   (இ) அளவடி (ஈ) நெடிலடி

5. துன்பக்கேணி நூலின் ஆசிரியர் யார்?
   (அ) புதுமைப்பித்தன்
   (ஆ) கி. ராஜநாராயணன்
   (இ) கு.ப. ராஜகோபாலன்
   (ஈ) மௌனி

6. மூன்றாவது மனிதர் ஒருவர் கதை சொல்வது எந்த கூற்றில் அமையும்?
   (அ) தன்மை கூற்று (ஆ) முன்னிலை கூற்று
   (இ) படர்க்கை கூற்று (ஈ) நேரடியான கூற்று



7. Climax கிரேக்க மொழியில் இதனைக் குறிக்கும் சொல் எது?
   (அ) படி (ஆ) ஏணி
   (இ) வரிசை (ஈ) முடிவு

8. நாடகத்தில் ஒரு காட்சி சத்தம் நிறைந்தது இன்னொரு காட்சி அமைதியாக இருக்க அமைப்பது இந்த உத்தி வகையைச் சாரும்.
   (அ) ஆர்வத்தொக்கல்
   (ஆ) உச்சநிலை
   (இ) எதிர்நிலை
   (ஈ) குறிப்பு

9. ஆரம்பம் – நடு – முடிவு என்ற திரைக்கதை அமைப்பை அடிப்படையாகக் கொண்ட திரைக்கதை அமைப்பு எது?
   (அ) மூன்று அங்க அமைப்பு
   (ஆ) நான்கு அங்க அமைப்பு
   (இ) முத்திறன் அமைப்பு
   (ஈ) முக்கோண அமைப்பு

10. திரைக்கதை எழுதுவது எப்படி நூலின் ஆசிரியர் யார்?
   (அ) சுஜாதா (ஆ) கல்கி
   (இ) பாலு மகேந்திரா (ஈ) மணி ரத்தினம்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் <u>250</u> சொற்களில் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) படைப்புணர்வு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) படைப்பிலக்கியத்தின் பயன்களை எழுதுக.

12. (அ) மரபுக் கவிதையின் தனித்துவங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) அங்கதம், முரண், குறியீடு ஆகிய உத்திகளை கவிதையில் பயன்படுத்தும் முறை குறித்து எழுதுக.

13. (அ) சிறுகதையில் நோக்குநிலை என்ற பிரிவை எழுதுக.

(அல்லது)

(ஆ) சிறுகதையில் அமைய வேண்டிய பாத்திர கூறுகளை புலப்படுத்துக.

14. (அ) பரிசோதனை நாடகம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) நாடகத்தில் அமையும் ஆர்வத்தொகுதல், உச்சநிலை குறித்து விளக்குக.



[P.T.O.]

15. (அ) திரைப்படத்தில் கதைமாந்தர்களின் பங்களிப்பினை எழுதுக.

(அல்லது)

(ஆ) திரைக்கதையில் உரையாடல் இடம் பெறும் திறம் யாது?

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) படைப்பாற்றல் திறன் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) படைப்பிற்கான ஊக்கம் ஏற்பட வழிகோல்களாக அமைவனவற்றை நிறுவுக.

17. (அ) சீரின் வகைகளை கூறி அவற்றை விரிவாக ஆய்க.

(அல்லது)

(ஆ) ஒன்றிய தளை ஒன்றாத தளை வகைகளைப் பட்டியலிடுக.

18. (அ) சிறுகதையில் கதைமாந்தர் வர்ணனை, கதைப் பின்னல்கள் குறித்து அட்டவணைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சிறுகதை எழுத்தாளர்கள் பயன்படுத்திய நடை வகைகளைக் கூறி அவர்களின் படைப்புகளை அவர்களின் நடையின் வழி சான்று தந்து விளக்குக.



19. (அ) மேடை நாடகம் அமைய வேண்டிய முறைகளை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம் அமையும் விதத்தை பகுத்தாய்க.

20. (அ) திரைக்கதையில் மொழி அவசியம் என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) திரைப்படத்திற்கு திரைக்கதையின் அவசியம் குறித்து மதிப்பிடுக.

---